சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**EP.No. 19 / 2022**

எ.ம.சா.1. முனியப்பன் 04.11.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.335/3 க்கு தென்மேற்கு மூலையில் மேல்புறம் யார் நிலம் உள்ளது என்றால் தங்கவேல் நிலம் உள்ளது. தங்கவேல் நிலத்தில் இருந்து 25 அடி கிழக்கே தள்ளி நான் வீடு கட்டியுள்ளேன். அந்த வீடு கட்டி சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். அந்த வீட்டிற்கு பின்னால் நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வண்டித்தடம் உள்ளது. காலியிடமும் உள்ளது. சர்வே எண்.335/2 யாருக்கு பாத்தியம் என்றால் எனது தம்பி மாரிமுத்துக்கு சொந்தமானது. அந்த சர்வே எண்ணிற்கு மேற்புறம் தங்கவேல் நிலம் உள்ளது. சர்வே எண்.335/2 ல் மேற்கு கடைசியில் எவ்வளவு அடி பாதை உள்ளது என்றால் 10 அடி பாதை உள்ளது. அதில் தென்னைமரம் வைத்துள்ளார். தங்கவேல் நிலத்திற்கும் தென்னைமரம் வைத்துள்ள இடத்திற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் தடத்தோடு சேர்த்து 15 அடி இருக்கும். அந்த பாதை 10 அடி தான் இருக்கும் மீதி 5 அடியை எனது தம்பி தான் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார். நான் சொல்லக்கூடிய பாதை வழியாக தான் குப்புச்சாமி நிலத்திற்கு போக முடியும் என்றால் சரிதான். அந்த பாதையில் முள், செத்தை தற்போது அடைத்துள்ளதா என்றால் தவறு வண்டி, மாடு சென்று கொண்டு தான் இருக்கிறது. அதில் முள் எதுவும் இருந்தால் அதை ஜே.சி.பி இயந்திரத்தை வைத்து அகற்றுவதற்கு எனக்கு சம்மதம் உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எனது தம்பிக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தம்பிக்கு தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தெரியும். அந்த தடத்தில் முள் இருந்தால் அதை வெட்டுவதற்கு எனது தம்பி ஆட்சேபனை செய்யமாட்டார். 28.02.2024ம் தேதி குப்புச்சாமி புகார் கொடுத்தது சம்மந்தமாக நான் சத்திரப்பட்டி காவல் நிலையம் சென்று வந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு சத்திரப்பட்டி போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். சத்திரப்பட்டி போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு எதுவும் இடையூறு செய்யாதீர்கள் வண்டிப்பாதையில் அவர்கள் போய் வரட்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு குப்புச்சாமி அந்த பாதை வழியாக சென்ற பொழுது அவரை தடுத்து இதுசம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்து வருவதாகவும் நீர் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளவும் நீதிமன்ற உத்தரவு என்னை எதுவும் கட்டுப்படுத்தாது என்று நான் சொன்னேனா என்றால் இல்லை. நான் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தவிடாமல் தடுத்து வருகிறேன்

என்றால் சரியல்ல. நான் அந்த பாதையை தற்போது வரை தடுத்து வைத்துள்ளதால் தான் மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அனைவரும் அந்த பாதையில் சென்று வருகிறார்கள். மனுதாரர், எதிர்மனுதாரரை தவிர வேறு யாரும் அந்த பாதையில் செல்லவில்லை. தங்கவேலும் தாவா பாதையில் தெற்கு கடைசியில் சென்று வருகிறார். தங்கவேல் தாவா பாதையில் சென்று வருகிறார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கவேலை நான் சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் அவர் இறந்துவிட்டார். அவரது குடும்பத்தில் உள்ளவர்களை நான் சாட்சியாக விசாரிக்க தயாரா உள்ளேனா என்றால் தயாரா உள்ளேன்.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.04 17:22:41 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்